

# TET
# ஆசிரியர் தகுதித் தேர்வு
## மாதிரி வினா - விடை
### தமிழ் தாள் I&II (for D.T.Ed., B.Ed.)

1. எட்டுத்தொகை நூல்களுள் முதல் நூல் எது?
A) கலித்தொகை B) குறுந்தொகை
C) நற்றிணை D) புறநானூறு

2. கற்றறிந்தவர்கள் புகழும் நூல் எது?
A) கலித்தொகை B) குறுந்தொகை
C) நற்றிணை D) புறநானூறு

3. நாடகப்பாங்கில் அமைந்த எட்டுத்தொகை நூல் எது?
A) அகநானூறு B) புறநானூறு
C) கலித்தொகை D) குறுந்தொகை

4. 'உண்பது நாழி உடுப்பவை இரண்டே' என்ற பாடல் அடிகளைப் பாடியவர்
A) நக்கீரனார் B) கண்ணகனார்
C) மோசி கீரனார் D) மருதன் இளநாகனார்

5. கோப்பெருஞ்சோழன் – பிசிராந்தையார் நட்பை அருகே கண்டு பாடியவர்
A) நக்கீரனார் B) கண்ணகனார்
C) கபிலர் D) மோசி கீரனார்

6. 'வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகம்' என்று பாடியவர்
A) கவிமணி B) நாமக்கல் கவிஞர்
C) பாரதியார் D) பாரதிதாசன்

7. 'செரு அடுதோள்' என்ற பட்டப் பெயரால் குறிக்கப்படுபவர்
A) கணி மேதாவியார் B) கூடலூர் கிழார்
C) உருத்திர சன்மர் D) நல்லாதனார்

8. உலகியல் நிலையாமையைப் பற்றிக் கூறும் நூல்
A) நந்திக்கலம்பகம் B) கம்பராமாயணம்
C) முதுமொழிக்காஞ்சி D) ஏலாதி

9. கீழ்க்கண்டவற்றுள் எது பதினெண்கீழ்க்கணக்கு நூல் அன்று?
A) நான்மணிக்கடிகை B) நாலடியார்
C) ஏலாதி D) நெடுநல்வாடை

10. காரியாசான் சார்ந்த சமயம்
A) சைவம் B) சமணம்
C) புத்தம் D) வீரசைவம்

11. குணவாயில் கோட்டத்தில் தங்கியிருந்த துறவி
A) இளங்கோ B) சீத்தலைச் சாத்தனார்
C) மாதவி D) கவுந்தியடிகள்

12. எது தவறாகப் பொருத்தப்பட்டுள்ளது?
A) கூலம்–18 B) கலம்–18
C) நிலம்–5 D) பகம்–6

13. பொருந்தாச் சொல்லை தேர்ந்தெடு
A) சந்திரன் சுவர்க்கி B) அபுல் காசிம் மரைக்காயர்
C) சடையப்ப வள்ளல் D) உமறுப்புலவர்

14. தமயந்தி எந்த நாட்டு இளவரசி?
A) நிடதநாடு B) விதர்ப்ப நாடு
C) மகதநாடு D) வருஷ நாடு

15. மகாபாரதத்தை தமிழில் மொழிபெயர்த்தவர்
A) வால்மீகி B) வேத வியாசர்
C) வில்லிபுத்தூரார் D) கம்பர்

16. ஒட்டக்கூத்தர் எழுதியது
A) உத்தரகாண்டம் B) யுத்த காண்டம்
C) சுந்தரகாண்டம் D) பால காண்டம்

டாக்டர் ஆதலையூர் சூரியகுமார்
M.A., M.A., M.Phil., M.Ed., Ph.D.

**17. கீழ்க்கண்ட எந்த நூலை கம்பர் எழுதவில்லை?**
A) சடகோபரந்தாதி B) ஏரெழுபது
C) சரஸ்வதி அந்தாதி D) நரி விருத்தம்

**18. விருத்தமென்னும் ஒன்பாவிற்கு உயர்...**
A) ஒட்டக்கூத்தர் B) நச்செள்ளையார்
C) கம்பர் D) வில்லிபுத்தூரார்

**19. தொகை அடியார்கள் மொத்தம் எத்தனை பேர்?**
A) 22 B) 12 C) 9 D) 63

**20. 'ஹாலசிய மான்மியம்' என்ற வடமொழி நூலைத் தழுவி எழுதப்பட்டது**
A) கந்தபுராணம் B) கருடபுராணம்
C) சீவக சிந்தாமணி
D) திருவிளையாடற் புராணம்

**21. "உலக வரலாற்றிலேயே இவரைவிட புலமை, உழைப்பு, துன்பத்தைப் பொறுத்தல், இடையறா நிலையான பக்தி ஆகியவற்றுடன் நம் மனதைக் கவர்கின்றவர் யாரும் இல்லை" என்று ஜி.யு.போப் யாரைப் போற்றுகிறார்?**
A) மாணிக்கவாசகர் B) திருவள்ளுவர்
C) வீரமாமுனிவர் D) திருநாவுக்கரசர்

**22. தமிழ் மூவாயிரம் என்று அழைக்கப்படுவது**
A) முத்தொள்ளாயிரம் B) திருமந்திரம்
C) திருவாசகம் D) இரட்சண்ய யாத்ரிகம்

**23. முக்கூடலின் வடகரை நாடு**
A) அசூர் B) சீவலப்பேரி
C) சீவலமங்கை D) திருநெல்வேலி

**24. குற்றாலநாதரை பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்பட்டது**
A) சிவபுராணம் B) குற்றாலீசுவர புராணம்
C) குற்றாலநாதர் கலம்பகம் D) குறவஞ்சி

**25. எது சரியாகப் பொருந்தவில்லை?**
A) 5 – அரிவை B) 3 – மங்கை
C) 4 – மடந்தை D) 6 – பெதும்பை

**26. யாருடைய பாட்டுக்கு ரெட்டைத் தாழ்ப்பாள் என்பது பழமொழி?**
A) இரட்டைப் புலவர்கள் B) ஒட்டக்கூத்தர்
C) கம்பர் D) குமரகுருபரர்

**27. பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் எத்தனை பாடல்களைக் கொண்டவை?**
A) பத்து B) நூறு C) ஆயிரம் D) நானூறு

**28. ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பது**
A) உலா B) தூது C) பள்ளு D) பரணி

**29. பொருந்தாச் சொல்லை நீக்குக**
A) மேகம் B) நெஞ்சு C) மான் D) தீ

**30. 'சேயூர் முருகன் பிள்ளைத்தமிழ்' என்ற நூலின் ஆசிரியர்**
A) குமரகுருபரர் B) அந்தகக்கவி வீரராகவர்
C) ஈசான தேசிகன் D) அண்ணாமலை ரெட்டியார்

**31. 'மோகனூர்' என்ற ஊரில் பிறந்தவர்**
A) வாணிதாசன் B) முடியரசன்
C) நாமக்கல் கவிஞர் D) பாரதிதாசன்

**32. குறுந்தொகை பாடல் அடி அளவு**
A) 9 அடிகள் முதல் 12 அடிகள் வரை
B) 4 அடிகள் முதல் 8 அடிகள் வரை
C) 2 அடிகள் முதல் 21 அடிகள் வரை
D) 6 அடிகள் முதல் 18 அடிகள் வரை

**33. கீழ்க்கண்டவர்களில் திருக்குறளுக்கு உரை எழுதாதவர் யார்?**
A) பரிதி B) பரிப்பெருமாள்
C) மல்லர் D) பெருமலையார்

**34. பூதஞ்சேந்தனார் வாழ்ந்த காலம்**
A) கி.பி. 2 ஆம் நூற்றாண்டு
B) கி.பி. 3 ஆம் நூற்றாண்டு
C) கி.பி. 4 ஆம் நூற்றாண்டு
D) கி.பி. 8 ஆம் நூற்றாண்டு

**35. சிலப்பதிகாரம் புகார்க் காண்டத்தின் காதைகள்**
A) 8 B) 13 C) 7 D) 10

**36. தண்டமிழ் ஆசான் எனப் போற்றப்படுபவர்**
A) திரு.வி.க. B) சீத்தலைச் சாத்தனார்
C) மறைமலையடிகள் D) தனிநாயக அடிகள்

**37. 'உலகெலாம்' என்று தொடங்கும் நூல்**
A) நாலாயிர திவ்யப் பிரபந்தம் B) தேவாரம்
C) திருவாசகம் D) பெரியபுராணம்

**38. சருக்கங்கள் எந்த நூலின் உட்பிரிவு?**
A) சிலப்பதிகாரம் B) சீறாப்புராணம்
C) தேம்பாவணி D) பாஞ்சாலி சபதம்

**39. பொருந்தாச் சொல்லை நீக்குக**
A) தருமசேனர் B) ஜூன சேனர்
C) வாகீசர் D) மருள் நீக்கியார்

**40. 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று கூறியவர்**
A) அண்ணா B) திருமூலர்
C) கருணாநிதி D) அப்பர்

**41. 'புத்தேள்' என்பதன் அலகீட்டு வாய்பாடு**
A) தேமா B) புளிமா C) பிறப்பு D) தேமாங்காய்

**42. பொருந்தாச் சொல்லை நீக்குக**
A) வெட்சி B) கரந்தை C) உழிஞை D) பாலை

**43. 'தென்னை' என்பது**
A) காரணப் பொதுப்பெயர்
B) காரணச் சிறப்புப்பெயர்
C) இடுகுறிப் பொதுப்பெயர்
D) இடுகுறிச் சிறப்புப்பெயர்

**44. 'வாழ்க' என்ற சொல் பகுபத இலக்கணத்தில் எப்படிப் பிரியும்?**
A) வாழ் + க் + அ B) வா + ழ் + க
C) வா + ழ் + க் + அ D) வாழ் + க

**45. முதற் சீரிலும் மூன்றாம் சீரிலும் வரும் மோனை**
A) ஒரூஉ மோனை B) பொழிப்பு மோனை
C) இணை மோனை D) அடி மோனை

**46. 'தொல்லுலகம்' என்பதன் இலக்கணக் குறிப்பு**
A) பண்புத் தொகை B) வினைத் தொகை
C) உவமைத் தொகை D) உம்மைத் தொகை

**47. அலை கடல் என்பதன் இலக்கணக் குறிப்பு**
A) பண்புத் தொகை B) வினைத் தொகை
C) உவமைத் தொகை D) உம்மைத் தொகை

**48. 'மலர்க்கொடி' என்பதன் இலக்கணக் குறிப்பு**
A) பண்புத் தொகை B) வினைத் தொகை
C) உவமைத் தொகை D) உம்மைத் தொகை

**49. தாய் தந்தை என்பதன் இலக்கணக் குறிப்பு**
A) பண்புத் தொகை B) வினைத் தொகை
C) உவமைத் தொகை D) உம்மைத் தொகை

**50. எது எடுத்தலளவை ஆகு பெயர்?**
A) பத்து கிலோ கொடு
B) இரண்டு லிட்டர் ஊற்று
C) உடுப்பது நான்கு முழம்
D) நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி

**51. கீழ்க்கண்ட எந்த ஒரு மொழி தமிழ் மொழியில் இருந்து பிரிந்த மொழி அல்ல?**
A) தெலுங்கு B) கன்னடம்
C) துளு D) கொங்கனி

**52. முகர்ந்து பார்த்தால் வாடும் மலர் எது?**
A) அனிச்ச மலர் B) தொட்டால்சிணுங்கி
C) செங்காந்தள் D) குவளை மலர்

**53. திருப்பூர் குமரன் பிறந்த ஊர் எது?**
A) உடுமலை B) சென்னிமலை
C) திருப்பூர் D) கோயம்புத்தூர்

**54. எது தவறான இணை?**
A) போஸ் திடல் – சேலம்
B) செஞ்சி – தேசிங்கு ராஜன்
C) குலக்கல்வித் திட்டம் – இராஜாஜி
D) சகாரா – தென் அமெரிக்கா

**55. 'சனகாதி முனிவர்கள்' என்ற ஓவியம் உள்ள இடம்**
A) சித்தன்னவாசல் B) கழுகு மலை
C) தஞ்சை பெரிய கோயில்
D) மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்

**56. எது தவறான இணை?**
A) பாண்டியர்கள் – வேப்பம் பூ
B) சோழர்கள் – ஆத்திப் பூ
C) சேரர்கள் – பனம் பூ
D) பல்லவர்கள் – வாகைப் பூ

**57. 'பொல்லாங்கு' என்ற சொல்லின் பொருள்**
A) கிருஷ்ணன் கையில் இருக்கும் புல்லாங்குழல்
B) திருமால் கையிலிருக்கும் சக்கரம்
C) தீமை தரக்கூடிய செயல்கள்
D) நன்மை தரக்கூடிய செயல்கள்

**58. 'நாள் மீன்' என்று பண்டைக் காலத்தில் தமிழர்களால் அழைக்கப்பட்டது**
A) சூரியன் B) துருவ நட்சத்திரம்
C) வால் நட்சத்திரம் D) வெள்ளிக் கோள்

**59. குறவஞ்சி நாடகங்கள் யார் காலத்தில் தோன்றின?**
A) நாயக்கர்கள் B) சோழர்கள்
C) சேரர்கள் D) பல்லவர்கள்

**60. 'வலவன் ஏவா வானவூர்தி' என்ற பாடல் வரிகள் இடம் பெற்றுள்ள சங்க இலக்கிய நூல்**
A) அகநானூறு B) நெடுநல்வாடை
C) முதுமொழிக் காஞ்சி D) புறநானூறு

**61. பொருத்துக**
1. வரை – a ) பொன்
2. ஆழி – b) மலை
3. மதுகரம் – c) மோதிரம்
4. கனகம் – d) வண்டு
1. 2. 3. 4.
A. b c d a
B. b d a c
C. c d a b
D. c a b d

**62. தென்னாட்டின் ஜான்சி ராணி**
A) அம்புஜத்தம்மாள் B) அஞ்சலையம்மாள்
C) வை.மு.கோதைநாயகி D) ருக்மணி லட்சுமிபதி

**63. கணித மேதை இராமானுஜம் நினைவாக தபால் தலை வெளியிடப்பட்ட ஆண்டு**
A) 1971 B) 1962 C) 1983 D) 1974

**64. கேடிலியப்பர் – கெசவல்லி அம்மையார் என்போர் யாருடைய பெற்றோர் ?**
A) இராமலிங்க அடிகள் B) முடியரசன்
C) வாணிதாசன் D) தாயுமானவர்

**65. 'போல' என்ற உவம உருபு வெளிப்பட்டு வருவது**
A) சிலேடை அணி
B) பிறிது மொழிதல் அணி
C) உவமை அணி
D) எடுத்துக்காட்டு உவமை அணி

**66. சரியான உறுப்புப் பெயரை தேர்வு செய்க: நெல்**
A) கீரை B) மடல் C) தாள் D) தழை

**67. பறவைகளின் ஒலியைத் தேர்ந்தெடு – கிளி**
A) கூவும் B) கொஞ்சும்
C) குழையும் D) பிறழும்

**68. தமுக்கம் மைதானம் எந்த நகரத்தில் உள்ளது?**
A) சென்னை B) கோவை C) திருச்சி D) மதுரை

**69. 'ஆடு' வாழும் இடத்தின் பெயர் என்ன ?**
A) கொட்டில் B) பட்டி C) தொழுவம் D) வளை

**70. எது தவறான இணை?**
A) வெற்பு – மலை B) வேய் – மூங்கில்
C) விசும்பு – வானம் D) கள்ளம் – இரக்கம்

**71. இந்தியாவை மொழிகளின் காட்சிச் சாலை என்று கூறியவர்**
A) துறைவன் B) பேரா.அகத்தியலிங்கம்
C) தேவநேயப் பாவாணர் D) கால்டுவெல்

**72. 'வீர அபிமன்யூ' நாடகத்தின் ஆசிரியர்**
A) பரிதிமாற் கலைஞர்
B) சங்கரதாஸ் சுவாமிகள்
C) பம்மல் சம்பந்த முதலியார் D) கந்தசாமி

**73. 'சாவி' எந்த மொழிச் சொல்?**
A) போர்த்துகீசியம் B) தெலுங்கு
C) அரபு D) உருது

**74. நாகப்பட்டினம் மாவட்டம் பழையனூர் என்ற ஊரில் பிறந்த கலைஞர்**
A) கவிமணி B) சுரதா
C) வாணிதாசன் D) நா.காமராசன்

**75. மக்கள் கவிஞர் என்று அழைக்கப்படுபவர்**
A) மருதகாசி
B) பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
C) உடுமலை நாராயணகவி
D) கண்ணதாசன்

**76. பொருந்தாச் சொல்லை நீக்குக**
A) சாலச்சிறந்தது B) நனி பசு
C) தடக்கை D) மதி முகம்

**77. கீழக்கண்ட சொற்றொடர்களுள் எது வள்ளலார் வாய் மொழிந்தது அல்ல?**
A) உயிர் இரக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்
B) வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்
C) அன்பைப் பெருக்கி எனது ஆருயிரைக் காக்க வந்த இன்பப்பெருக்கே
D) அப்பா நான் வேண்டுதல் கேட்டு அருள் புரிதல் வேண்டும்

**78. சூரியன் என்னும் பொருள் தரும் வேறு சொல் எது?**
A) எல் B) பழமை C) அறிவன் D) பரியன்

**79. உயிரளபெடை எத்தனை வகைப்படும்?**
A) 2 B) 3 C) 4 D) 5

**80. 'ஆற்றுணா' என்பது**
A) இதுவரை உரை காணப்படாத சங்க இலக்கிய நூல்
B) கட்டுச்சோறு
C) குறவஞ்சிப் பாடல்களில் பயன்படுத்தப்படும் உத்தி
D) புலவர்களை புரவலர்கள் நோக்கி ஆற்றுப்படுத்தும் நிகழ்ச்சி

**81. கலித்தொகையில் நெய்தல் திணைப் பாடல்களைப் பாடியவர்**
A) கபிலர் B) சோழன் நல்லுருத்திரன்
C) மருதன் இளநாகனார் D) நல்லந்துவனார்

**82. எது சரியான இணை?**
A) திரிகடுகம் – 3 B) சிறுபஞ்சமூலம் – 6
C) ஏலாதி – 8 D) நான்மணிக் கடிகை – 5

**83. முதுமொழிக்காஞ்சி என்ற நூலின் ஆசிரியர்**
A) காரியாசான் B) நல்லாதனார்
C) கூடலூர் கிழார் D) சமண முனிவர்கள்

**84. நரி விருத்தம் பாடியவர்**
A) கம்பர் B) குமரகுருபரர்
C) திருத்தக்கதேவர் D) புகழேந்தி

**85. 'வில்லிபுத்தூராரை' ஆதரித்த வள்ளல்**
A) சந்திரன் சுவர்க்கி B) சடையப்ப வள்ளல்
C) வரபதி ஆட்கொண்டான்
D) அபுல்காசீம் மரைக்காயர்

**86. 'உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியம் பெரியபுராணம்' என்று கூறியவர்**
A) ஜி.யு.போப் B) திரு.வி.க.
C) பாரதிதாசன் D) சுரதா

**87. 'தென்னவன் பிரம்மராயன்' என்ற பட்டத்திற்கு சொந்தமானவர்**
A) மாணிக்கவாசகர் B) சேக்கிழார்
C) திருமூலர் D) குலசேகரப் பாண்டியன்

**88. 'வானரங்கள் கனிகொடுத்து மந்தியொடு கொஞ்சும்' இப்பாடல் அடிகள் இடம் பெற்ற நூல்**

A) அழகின் சிரிப்பு B) கண்ணன் பாட்டு
C) குற்றாலக் குறவஞ்சி D) முக்கூடற்பள்ளு

**89. எது சரியான வரிசை?**
A) காப்பு, செங்கீரை, சப்பாணி, தால்
B) செங்கீரை, காப்பு, தால், சப்பாணி
C) காப்பு, செங்கீரை, தால், சப்பாணி
D) தால், சப்பாணி, செங்கீரை, காப்பு

**90. பொருத்துக**
1. செயங்கொண்டார் – a ) குன்றத்தூர்
2. குமரகுருபரர் – b ) திருவாதவூர்
3. மாணிக்கவாசகர் – c ) வைகுண்டம்
4. சேக்கிழார் – d ) தீபங்குடி
1. 2. 3. 4.
A. d c b a
B. d a b c
C. a c b d
D. a b c d

**91. "எனக்கு மிக விருப்பமான இலக்கியம் ஒன்று உண்டென்றால் அது கலிங்கத்துப்பரணியே..." என்று கூறியவர்**
A) பாரதிதாசன் B) அறிஞர் அண்ணா
C) மறைமலை அடிகளார் D) பரிதிமாற் கலைஞர்

**92. ஆனந்த விகடன் இதழில் 'என் சரிதம்' எழுதியவர்**
A) உ.வே.சா. B) கி.வா.ஜ.
C) திரு.வி.க. D) வ.உ.சி.

**93. எது தவறானது?**
A) பச்சைப்பட்டு B) நூலைப்படி
C) விழிப்புனல் D) அவைப்பறந்தன

**94. தவறான இளமை மரபைக் கண்டுபிடி**
A) கீரிப்பிள்ளை
B) குதிரைக்குட்டி
C) அணிற்பிள்ளை
D) புலிக்குட்டி

**95. சரியான வினை மரபைக் கண்டுபிடி**
A) நாற்று நடு B) தண்ணீர் அருந்து
C) கோலம் போடு D) தீ வை

**96. 'குகைப்புலி' என்பதன் இலக்கணக் குறிப்பு**
A) ஏழாம் வேற்றுமைத் தொகை
B) ஆறாம் வேற்றுமைத் தொகை
C) மூன்றாம் வேற்றுமைத் தொகை
D) நான்காம் வேற்றுமைத் தொகை

**97. 'வெற்றிலை நட்டான்' என்பது**
A) பண்பாகு பெயர் B) காலவாகு பெயர்
C) சினையாகு பெயர் D) தொழிலாகு பெயர்

**98. 'அடவிமலையாறு' என்பது**
A) உவமைத் தொகை
B) உம்மைத் தொகை
C) இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை
D) உரிச்சொல் தொடர்

**99. 'காய்ச்சீர்' எத்தனை வகைப்படும்?**
A) 2 B) 4 C) 8 D) 16

**100. பொருந்தாச் சொல்லைத் தேர்ந்தெடு**
A) அகநானூறு B) புறநானூறு
C) குறுந்தொகை D) மதுரைக் காஞ்சி

## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. C | 2. A | 3. C | 4. A | 5. B | 6. D | 7. D | 8. C | 9. D | 10. B |
| 11. A | 12. B | 13. D | 14. B | 15. B | 16. A | 17. D | 18. C | 19. C | 20. D |
| 21. A | 22. B | 23. A | 24. D | 25. D | 26. B | 27. B | 28. D | 29. D | 30. B |
| 31. C | 32. B | 33. D | 34. A | 35. D | 36. B | 37. D | 38. D | 39. B | 40. B |
| 41. A | 42. D | 43. C | 44. D | 45. B | 46. A | 47. B | 48. C | 49. D | 50. A |
| 51. D | 52. A | 53. B | 54. D | 55. C | 56. D | 57. C | 58. A | 59. A | 60. D |
| 61. A | 62. B | 63. B | 64. D | 65. C | 66. C | 67. B | 68. D | 69. B | 70. D |
| 71. B | 72. C | 73. A | 74. B | 75. B | 76. D | 77. C | 78. A | 79. B | 80. B |
| 81. D | 82. A | 83. C | 84. C | 85. C | 86. B | 87. A | 88. C | 89. C | 90. A |
| 91. B | 92. A | 93. D | 94. D | 95. A | 96. A | 97. C | 98. B | 99. B | 100. D |